# தென்னை நாற்றுப்பண்ணை அமைப்பதற்கான நிதி உதவிக்கான விண்ணப்பம்

**சரியான நடவு விதைக்காய்கள் / தாய்மரம்தேர்ந்தெடுப்பதற்கான அளவுகோல்கள்**

80 முதல் 100 ஆண்டுகள் ஆயுட்காலம் கொண்ட தென்னை ஒரு மனிதனின் வாழ்நாளுக்கு நிகரான ஒரு வற்றாத பயிராக இருப்பதால் , தென்னை சாகுபடியில் சரியான விதைக்காய்கள் / தாய்மரம் தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமானது. பல்வேறு நிலைகளில் கடுமையான தேர்வு மூலம் தரமான விதைகள் மற்றும் நாற்றுகள் பெறப்படுகின்றன. தேர்ந்தெடுப்பதற்கான சில முக்கியமான அளவுகோல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- மரம் வேர் வாடல் மற்றும் பிற நோய்கள் இல்லாமல் இருக்க வேண்டும்.
- அதிக மகசூல் தருகின்ற தாய் மரங்கள். பாசன வசதியுடன் கூடிய நிலத்தில் குறைந்தது ஆண்டிற்கு மரம் ஒன்றிற்க்கு 100 காய்கள் வீதம் தருகின்ற மரங்களை தேர்வு செய்யலாம். மானாவாரி நிலத்தில் ஆண்டிற்கு மரம் ஒன்றிற்க்கு 70-80 காய்கள் தரும் மரங்களை தேர்வு செய்யலாம்.
- அதிக எண்ணிக்கையில் ஓலைகள் (30க்கும் அதிகமான முழுவதும் திறந்த ஓலைகள்) மற்றும் பாளைகள் விடுதல் (12 பாளைகள்) மரங்களாக இருக்கவேண்டும்.
- கட்டையான, தடித்த குலைக்காம்பு மற்றும் தண்டுடன் உறுதியாக இணைந்துள்ள அகன்ற அடிமட்டை கொண்டு இருக்கவேண்டும்.
- கட்டையான, தடித்த பாளை கம்புள்ள குலைகள் , இலைக் கம்பின் கீழ்ச் சுருள் மீது அமர்ந்த வண்ணம், மற்றும் அதிக எண்ணிக்கையிலான பெண் மலர்களுடன் (25க்கும் அதிகமாக) இருக்க வேண்டும்.
- நீண்ட, ஒல்லியான பாளைக் காம்புள்ள மரங்கள் , நீண்ட, ஒல்லியான, சிறிய காய்கள் அல்லது வெற்றுக் காயுள்ள மரங்கள் , மாற்றுக் காய்ப்பு தன்மையுள்ள மரங்களைத் தவிர்க்கவும், அதிக குருத்து உதிர்வு தன்மையுள்ள மரங்கள் , தகுந்த சூழலில் வளராத மரங்கள் எ.கா:எருக்குழி அருகில் உள்ள மரங்களை தவிர்க்கவேண்டும்.
- பிப்ரவரி முதல் மே வரை விதைக்காய்களை சேகரிக்கவும்.
- முழுமையாக முதிர்ந்த விதைக்காய்களை மட்டுமே அறுவடை செய்யவும் (11 மாத வயது).
- அறுவடை செய்யும் போது காய்களை சேதப்படுத்தக்கூடாது.
- ஒழுங்கற்ற வடிவம் மற்றும் அளவு கொண்ட விதைக்காய்களை நிராகரிக்கவும்.


**தென்னை வளர்ச்சி வாரியம்**

(வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகம் – இந்திய அரசு)

மண்டல அலுவலகம்

எண் -47/ F1 ,டாக்டர்.ராமசாமி சாலை,

கே.கே.நகர் ,சென்னை -600078

# தென்னை நாற்றுப்பண்ணை அமைக்க (சிறிய அளவில்) நிதி உதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் : ...............................................

2. முகவரி : ...............................................

...............................................

...............................................

...............................................

கைபேசி ...............................................

3. நாற்றுப்பண்ணை நிறுவப்படும் இடம் : ...............................................

4. ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பொது வகுப்பை சேர்ந்தவரா? : ஆதிதிராவிடர் பழங்குடியினர் பொது

5. விண்ணப்பதாரர் கூட்டுறவு சங்கம்/அரசு சாரா அமைப்பு (NGO)/வேளாண் அறிவியல் நிலையம் ( KVK) அல்லது வேறு ஏதேனும் மேம்பாட்டு நிறுவனமா என்பதைக் குறிப்பிடவும், அப்படியானால் பதிவு எண்ணைக் கொடுங்கள் : ...............................................

6. இந்த அலகிற்கு வங்கியால் நிதியளிக்கப்பட்டால், விவரங்களைக் கொடுக்கவும்

(அ) வங்கி மற்றும் கிளையின் பெயர் : ...............................................

(ஆ) அனுமதிக்கப்பட்ட திட்டத்தின் மொத்த செலவு : ரூ...............................................

(இ) அனுமதிக்கப்பட்ட கடன் தொகை : ரூ...............................................

(ஈ) விண்ணப்பதாரருக்கு தேவைப்படும் மானியம் : ரூ...............................................

7. முன்மொழியப்பட்ட தென்னை நாற்றங்காலின் விவரங்கள்

(அ) பகுதி (எக்டேர்) : ...............................................

(ஆ) சர்வே எண் மற்றும் கிராமம் , வட்டம் & மாவட்டத்தின் பெயர் : ...............................................

: ...............................................

(இ) வருடத்திற்கு உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்ட நாற்றுகளின் எண்ணிக்கை : ...............................................

(ஈ) விதைக்க வேண்டிய விதை தேங்காய்கள் பற்றிய விவரங்கள்

| **வரிசை எண்** | **ரகங்கள்** | **விதை தேங்காய்களின் எண்ணிக்கை** | **விதை கொள்முதல் * (அரசு/உள்ளூர் கொள்முதல்)** |
|---|---|---|---|
| 1. | மேற்கு கடற்கரை நெட்டை | | |
| 2. | கலப்பினம் (TXD, DXT) | | |

| | | | |
|---|---|---|---|
| 3. | குட்டை ( சௌகாட் ஆரஞ்சு கு ட்டை, சௌகாட் பச்சை குட்டை, மலேயன் பச்சை குட்டை) | | |
| 4. | அங்கீகரிக்கப்பட்ட பிற ரகங்கள் ஏதேனும் இருந்தால் | | |

(*அரசு பண்ணையிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டால் , பண்ணையின் பெயர் அல்லது கொள்முதல் செய்யப்படும் காய்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் அளிக்கப்பட வேண்டும். உள்நாட்டில் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்றால் , தாய் மரங்கள் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி / கிராமத்தின் பெயர் போன்ற விவரங்கள். அடையாளம் காணப்பட்ட தாய் மரங்களின் பட்டியல் போன்றவை தனித்தனியாக இணைக்கப்பட வேண்டும்.)

(உ) நாற்றுப்பண்ணை கண்காணிப்புக் குழுவால் நடவுப்பொருட்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா : ……………………………………………

8. நாற்றங்காளுக்கான செலவு மதிப்பீடு : ரூ……………………………………………

9. நிலையான செலவு/தொடர் அல்லாத செலவுகள்

<u>**பொருள்**</u> <u>**செய்யப்பட்ட செலவு (ரூ.)**</u>

(அ) வேலி அமைத்தல் : ரூ……………………………………………

(ஆ) நிரந்தர நிழல் : ரூ……………………………………………

(இ) நில மேம்பாடு : ரூ……………………………………………

(ஈ) நீர்ப்பாசன வசதிகள் (பம்ப்செட்/ஸ்பிரிங்லர்) : ரூ……………………………………………

**மொத்தம்** : ரூ……………………………………………

10. தென்னை நாற்றுகள் உற்பத்திக்கான செலவு மதிப்பீடு (தொடர் செலவுகள்)

<u>**பொருள்**</u> <u>**செய்யப்பட்ட செலவு (ரூ.)**</u>

(அ) விதை காய்களின் விலை : ரூ……………………………………………

(ஆ) போக்குவரத்து கட்டணம் : ரூ……………………………………………

(இ) நெகிழி ( பாலித்தீன்) பை / நிழல் வலை போன்றவற்றின் விலை. : ரூ……………………………………………

(ஈ) மணல் விலை : ரூ……………………………………………

(உ) பூச்சிக்கொல்லி மருந்தின் விலை : ரூ……………………………………………

(ஊ) விதை பாத்தி தயாரிப்பதற்கான தொழிலாளர் கட்டணம் : ரூ……………………………………………

(எ) நீர்ப்பாசனம், களையெடுத்தல், பயிர் பாதுகாப்பு இரசாயனங்களைப் பயன்படுத்துதல் போன்றவற்றுக்கான தொழிலாளர் கட்டணம். : ரூ……………………………………………

(ஏ) பிற இதர செலவுகள் ஏதேனும் இருந்தால் (குறிப்பிடவும்) : ரூ……………………………………………

**மொத்தத்தொகை** : ரூ……………………………………………

நாற்றுக்கான உத்தேச விலை : ரூ……………………………………………

# விண்ணப்பதாரரின் அறிவிப்பு

நான்/நாங்கள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . தபெ./மபெ./கபெ.. . . . . . . . . . . . . . . . . . . . . . . . முகவரி. . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மை மற்றும் சரியானவை என்றும் , தென்னை நாற்றுப்பண்ணை அமைப்பதற்கான நிதி உதவியைப் பெறுவதற்கு, தென்னை வளர்ச்சி வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு நான்/நாங்கள் கட்டுப்படுவோம் என்றும் தென்னை நாற்றுப்பண்ணை நிறுவுவதற்கு நான்/நாங்கள் வேறு எந்த அரசு நிறுவனத்திடமிருந்தும் நிதி/மானியம் பெறவில்லை என்று இதன் மூலம் உறுதியளிக்கிறேன்.

தேதி:...............................................

இடம்:.......................................... கையொப்பம்

---

## <u>சான்றிதழ்</u>

(மாநில அரசின் வேளாண்மை/தோட்டக்கலை அலுவலர்/ வாரியத்தின் தொழில்நுட்ப அலுவலர் சான்றிதழ்)

நான் திரு/திருமதி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . மேற்கண்ட விண்ணப்பதாரரின் தென்னை நாற்றுப்பண்ணை ஆய்வு செய்ததில். விண்ணப்பதாரர் அந்த நிலத்தில் வருடத்திற்கு . . . . . நாற்றுகள் உற்பத்தி திறன் கொண்ட நாற்றுப்பண்ணை அமைப்பதற்கு பொருத்தமான இடத்தை . . . . . ஹெக்டேர் அளவில் வைத்துள்ளார் . விதைக்காய்கள் கொள்முதல், நாற்றுப்பண்ணை கண்காணிப்புக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தேதி:........................ கையொப்பம் -

இடம்:........................ (அலுவலக முத்திரை) அலுவலரின் பெயர் மற்றும் பதவி -

---

## <u>அலுவலக உபயோகத்திற்கு மட்டும்</u>

சரிபார்ப்பு அலுவலரின் கருத்து

பெயர் & பதவி

---

## <u>அனுமதி அதிகாரத்தின் ஆணை</u>

அனுமதிக்கப்பட்ட ரூ............. (ரூபாய் ..........................................................................................

.................................................................................. மட்டும்)

**தலைவர்**

**தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி.**

## தென்னை நாற்றுப்பண்ணை செயல்படுத்துவதற்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள்

1. தென்னை நாற்றங்கால் திட்டம் தென்னை வளர்ச்சி வாரியத்தால், மாநில வேளாண்மை / தோட்டக்கலைத் துறை மூலமாகவும், பஞ்சாயத்துகள், அரசு சாரா நிறுவனங்கள், வேளாண் கிளினிக்குகள், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை நிறுவனம், விவசாயிகள் குழு போன்றவற்றின் மூலமாகவும் தீவிரப் பங்கேற்புடன் செயல்படுத்தப்படும்.
2. நாற்றங்கால் அமைப்பதற்க்கான விண்ணப்பம் தனிநபர் அல்லது சுய உதவி குழுக்களுக்கு கீழ் உள்ள விவசாயிகளோ விண்ணபிக்கலாம். குத்தகைக்கு விடப்பட்ட நிலமாக இருந்தால் (குத்தகை காலம் 5 ஆண்டுகளுக்கு குறைவாக இருக்கக்கூடாது). ஊராட்சி நிலமாக இருந்தால் நாற்றுப்பண்ணை ஊராட்சியால் நிர்வகிக்கப்படவேண்டும்.
3. 10,000 விதைக் காய்களை விதைப்பதற்கு குறைந்தபட்சம் 25 சென்ட் பரப்பளவு இருக்க வேண்டும் மற்றும் ஆண்டுக்கு 6250 நாற்றுகளை உற்பத்தி (60-65 சதவிகிதம்) செய்து காட்டவேண்டும்.
4. அதிக மகசூல் தருகின்ற தாய் மரங்கள். பாசன வசதியுடன் கூடிய நிலத்தில் குறைந்தது ஆண்டிற்கு மரமொன்றிற்கு 100 காய்கள் வீதம் தருகின்ற மரங்களை தேர்வு செய்யலாம். மானாவாரி நிலத்தில் ஆண்டிற்கு மரமொன்றிற்கு 70-80 காய்கள் தரும் மரங்களை தேர்வு செய்யலாம். அதிக எண்ணிக்கையில் ஓலைகள் (30க்கும் அதிகமான முழுவதும் திறந்த ஓலைகள்) மற்றும் பாளைகள் விடுதல் (12 பாளைகள்) மரங்களாக இருக்கவேண்டும். கட்டையான, தடித்த குலைக்காம்பு மற்றும் தண்டுடன் உறுதியாக இணைந்துள்ள அகன்ற அடிமட்டை கொண்டு இருக்கவேண்டும். கட்டையான, தடித்த பாளை கம்புள்ள குலைகள், இலைக் கம்பின் கீழ்ச் சுருள் மீது அமர்ந்த வண்ணம், மற்றும் அதிக எண்ணிக்கையிலான பெண் மலர்களுடன் (25க்கும் அதிகமாக) இருக்க வேண்டும். மரம் வேர் வாடல் மற்றும் பிற நோய்கள் இல்லாமல் இருக்க வேண்டும்.
5. சம்பந்தப்பட்ட மாநிலங்களின் வேளாண்மை / தோட்டக்கலை அலுவலகங்கள் பரிந்துரைக்கப்பட்ட தரமான விதைக்காய்களின் நம்பகமான தன்மையை உருவாக்குவதற்காக பாரா 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்களைக் கொண்ட வேளாண்மைத் துறையிடம் பதிவுசெய்யப்பட்ட தாய் மரங்களிலிருந்து விதைக்காய்களை தேர்வு செய்யலாம்.
6. விவசாயிகள் குழுக்கள் மற்றும் பிற உள்ளூர் நிறுவனங்களை ஈடுபடுத்துவதன் மூலமும் தாய் மரங்களை அடையாளம் காண முடியும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அடையாளம் காணப்பட்ட மரங்கள் உள்ளூர் வேளாண் அலுவலர், மாநில வேளாண் பல்கலைக்கழகம் அல்லது மத்திய மலைத்தோட்ட பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் விஞ்ஞானி அல்லது தென்னை வளர்ச்சி வாரியத்தின் அலுவலர் மற்றும் பிரதிநிதியைக் கொண்ட ஒரு நாற்றுப்பண்ணை கண்காணிப்புக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டு இறுதியாக தேர்ந்தெடுக்கப்படும். ஊராட்சி அல்லது விவசாயிகள் குழு நாற்றங்கால் கண்காணிப்பு குழுவை அமைக்க, வட்டார வேளாண் உதவி இயக்குனர் நடவடிக்கை எடுப்பார்.
7. தாய் மரங்களை அடையாளம் காணப்பட்ட பிறகு, பயனாளி ஒரு சுருக்கமான திட்ட அறிக்கை மற்றும் ரூ. 500/-க்கான வரைவோலையை இயக்குனர், தென்னை வளர்ச்சி வாரியம், சென்னை என்பவருக்கு எடுத்து விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும்.
8. விதைக்காய்களை பயனாளி அங்கீகரிக்கப்பட்ட தாய் மரங்களில் இருந்தோ அல்லது கிடைக்கக்கூடிய அரசாங்க பண்ணைகளில் இருந்தோ கொள்முதல் செய்யப்பட வேண்டும்.
9. நாற்றுகளை விநியோகம் செய்வதற்கு முன் சான்றளிப்பது கண்காணிப்பு குழுவின் பொறுப்பாகும்.
10. வங்கி / கூட்டுறவு வங்கிகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிதி நிறுவனங்களிடமிருந்து அல்லது சொந்த நிதி மூலம் குறுகிய கால கடனைப் பெறுவதன் மூலம் நாற்றுபண்ணையை உருவாக்கலாம். இருப்பினும் கடன் இணைக்கப்பட்ட நாற்றுப்பண்ணை திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
11. ஆண்டுக்கு 6250 தரமான நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கு ரூ. 50,000/- நிதியுதவி (இரண்டு தவனையாக தலா ரூ.25,000/-). இது விதைக்காய், நாற்றுப்பண்ணை பராமரிப்பு மற்றும் உருவாக்குவதற்கான செலவில் 25% ஆகும். முதல் தவணை, விதைக் காய்கள் விதைக்கப்பட்ட பிறகு தரப்படும். இரண்டாவது தவணை நாற்றுப்பண்ணை கண்காணிப்பு குழுவால் முதல் ஆண்டு விதைப்பு நாற்றுகள் சான்றளிக்கப்பட்ட பிறகு மற்றும் இரண்டாம் ஆண்டுக்கான விதைக் காய்கள் விதைக்கப்பட்ட பிறகு இரண்டாம் ஆண்டில் தரப்படும்.
12. நாற்றுப்பண்ணையில், விதைக் காய்கள் சேகரிக்கப்பட்ட மரங்களின் விவரங்களைப் பதிவு செய்ய ஒரு தாய் மர பதிவேட்டை பராமரிக்க வேண்டும். விதைக்கப்பட்ட காய்கள், முளைத்த விவரங்கள், நாற்றுகளை உருவாக்கிய மற்றும் நாற்றுகளை விற்பனை விவரங்கள் மற்றும் வாங்குபவர்கள் / விவசாயிகளின் பெயர் மற்றும் முகவரியுடன் எதிர்கால சரிபார்ப்புக்காக ஒரு பதிவேட்டையும் பராமரிக்க வேண்டும்.
13. பெறப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து பயனாளிகள் இறுதியாக இடர் தாங்கும் திறன், திருப்பிச் செலுத்தும் திறன், தொழில்முறை பின்னணி மற்றும் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பக் கட்டணம் ரூ500/- திரும்பப் பெறப்படாது.
14. இந்த வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைபிடிக்கும் மற்றும் 5 வருட காலத்திற்கு திருப்திகரமாக செயல்படும் நாற்றுப்பண்ணை தென்னை வளர்ச்சி வாரியத்தின் அங்கீகார திட்டத்திற்கு பரிசீலிக்கப்படும்.